## கடந்த 9 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு

# தமிழ்நாட்டிற்குச் செய்தது என்ன?

### சேலத்தில் நடைபெற்ற கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

சேலம், ஜீன் 12-

**ஒன்பது ஆண்டு ஒன்றிய பா.ஜ.க ஆட்சியில் தமிழ்நாட்டுக்குச் செய்த சிறப்புத் திட்டங்கள் என்ன என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களால் பட்டியல் போட முடியுமா? என்று கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில் வினா எழுப்பியுள்ளார்.**

சேலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டத்துக்குத் தலைமையேற்றுக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு.

சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு ஆகிய மாவட்டக் கழகங்களுக்கு உட்பட்ட, மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள் பங்குபெறும் கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில் உங்களோடு சேர்ந்து நானும் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தெம்போடு, ஒரு இறுமாப்போடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கின்ற சூழலில் நான் கலந்து கொள்ளும் முதல் மாவட்டக் கழகக் கூட்டமாக இந்த ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகக் கூட்டமானது அமைந்திருக்கிறது.

கழகத்தில் தொண்டனுக்குத் தொண்டராய் செயல்வீரனுக்கு செயல்வீரராய் களத்தில் முதல் போர்வீரனாய் இருந்து மறைந்த அண்ணன் வீரபாண்டியாரைத் தந்த சேலத்தில் இந்த கூட்டம் நடக்கிறது.



முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம், சேலத்தில் நடைபெற்ற சேலம் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்டக் கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நீர்வளத் துறை அமைச்சரும் கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக மாவட்டச் செயலாளர்கள் இரா.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி, எஸ்.ஆர்.சிவலிங்கம், கழக மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கிளைக்கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நம்முடைய பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல, சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் இணைக்கப்பட்டு, திராவிடர் கழகம் உருவான ஊர் இந்த சேலம். நம்மை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட 'அண்ணாதுரை தீர்மானம்' இதே சேலத்தில் தான், திராவிடர் கழகத்தை உருவாக்கியது. சமூகச் சீர்திருத்த இயக்கமான திராவிடர் கழகத்தில் இருந்து அந்தச் சீர்திருத்த எண்ணங்களைச் சட்டபூர்வமாக நடைமுறைக்குக் கொண்டு வர திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைக் கண்டார், பேரறிஞர் அண்ணா அவர்கள். இதே சேலத்தில் தங்கி இருந்துதான் கனல் கக்கும் வசனங்களை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

**என் வாழ்வில் மறக்க முடியாத ஊர்**

எனது வாழ்விலும் மறக்க முடியாத ஊர் இந்த சேலம்! 1996ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1997ஆம் ஆண்டு நடந்த 'சேலம் மாநாடு' மூன்று நாட்கள் நடந்தது. அந்த மாநாட்டில் எனக்கு மிகப்பெரிய பெருமை ஒன்று கிடைத்தது. அந்த பெருமையை ஏற்படுத்தித் தந்தவர் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்கிறேன். பல்லாயிரக்கணக்கான தி.மு.க. தொண்டர்கள் அணிவகுக்கும் ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் பெரும் பேறை எனக்கு உருவாக்கித் தந்தார்.

இங்கிருக்கும் கழக முன்னோடி கள் எல்லாம் மறந்திருக்க மாட்டீர்கள். மாலை 5 மணிக்குத் தொடங்கிய பேரணி, விடிய விடிய நடந்தது. தலைவர் கலைஞர் அவர்கள், மாலை 5 மணிக்கு ஊர்வலத்தைப் பார்வையிட மேடையில் வந்து அமர்ந்தார். மறுநாள் காலை 8 மணி வரைக்கும் பேரணி முடியவில்லை, இன்னும் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் 8 மணிக்கு மாநாட்டு திடலில் கழக கொடியேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் கலைஞர் அவர்கள் புறப்பட்டுச் சென்றார்.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், அப்படிப் பட்ட மாபெரும் பேரணிக்கு தலைமை தாங்கும் வாய்ப்பு இந்த அடியேனுக்குக் கிடைத்ததை எண்ணி இன்றைக்கும் நான் பெருமைப்படுகிறேன்.

அதேபோல் மூன்று நாள் மாநாட்டில் முதல் நாள் நிகழ்ச்சி முழுவதும் இளைஞரணி மாநாடாக நடத்திக் கொள்ளவும் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் நமக்கு அனுமதி தந்தார்கள். அந்த மூன்று நாள் மாநாட்டில் ஒரு நாள் நம்முடைய இளைஞரணி மாநாடு நடந்தது.

1997ஆம் ஆண்டு நடந்த சேலம் மாநாட்டில் பேரணிக்குத் தலைமை வகித்து வந்த நான், 2004ஆம் ஆண்டு மாநாட்டில் 50 அடி உயரத்தில் கழகக் கொடியை ஏற்றி வைக்கும் வாய்ப்பை அண்ணன் வீரபாண்டியார் அவர்களால் பெற்றவன்தான் இந்த ஸ்டாலின். 'வீரபாண்டி அழைக்கிறார்' என்று தலைவர் அழைப்பு விடுத்தார். உடன்பிறப்புகளுக்கு எழுதிய கடிதத்தில் அந்த மாநாட்டைப் பற்றி எழுதினார். அந்த நினைவலைகளில் நீந்தியவனாக உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை இந்த ஆண்டு முழுவதும் நாம் கொண்டாடப் போகிறோம். அதற்காகக் கழகத்தின் உயர்நிலைச் செயல்திட்டக் குழு கூட்டம் கூடி தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்.

**தீர்மானங்களை செயல்படுத்திடுவீர்**

'ஊர்கள் தோறும் தி.மு.க.' என்ற தலைப்பில் ஒவ்வொரு ஊரிலும் கழகத்தின் கொடிக் கம்பங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்றும்,

'கழகமே குடும்பம்' என்ற தலைப்பில் கழக முன்னோடிகளுக்கும், கழகக் குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகளின் கல்விக்கும் நாம் உதவிட வேண்டும் என்றும்,

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

---

முதல்வரின் கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ்

## திறன் பயிற்சி பெற்ற 1,425 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜீன் 12-

முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 1425 பேருக்கு பணி நியமன ஆணைகளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம் 10.06.2023 அன்று சென்னை பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட 1425 பேருக்கு பணி நியமன ஆணைகளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்வழங்கினார்.

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

மாணவர்களுக்கு துறை சார்ந்த திறன் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென்ற நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்ட மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்டம் "நான் முதல்வன்" திட்டம். இத்திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவர்களுக்கு நவீன பாடப்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கி அவர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்குடன் துவங்கப்பட்ட ஓராண்டிலேயே பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் 13 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளித்து 'நான் முதல்வன்' திட்டம் சாதனை புரிந்துள்ளது.

பொறியியல் கல்லூரிகளில் துவங்கப்பட்ட இத்திட்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் என உயர் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அந்தந்த கல்லூரி வளாகங்களிலேயே வழங்கி வருகிறது.

இத்தகைய திறன் பயிற்சி பெற்ற மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறும் நோக்கில் பொறியியல் கல்லூரிகளில் இதுவரை நடைபெற்ற வளாக வேலை வாய்ப்பு முகாம்களில் 64,943 மாணவர்கள் பணிவாய்ப்பு பெற்றுள்ளார்கள் என்பதையும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 78,196 மாணவர்கள் பணி வாய்ப்பு பெற்றுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து இம்மாதம் இறுதிவரை இதுபோன்ற முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது .

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த வேலை வாய்ப்பு முகாமில் செயின்ட் கோபின் (Saint Gobain), மைக்ரோ சாப்ட் (Microsoft SAP, Edunet), மிஸ்டர் கூப்பர் (Mr.Cooper), டெக் மகேந்திரா (Tech Mahindra), ஆதித்யா பிர்லா (Aditya Brila Group), பைஜீஸ் (Byjus), பிளிப்காட் (Flipcart), ஹெச்டி எப்.சி. (HDFC), ஐ.சி.ஐ.சி.ஐ.

( ICICI), இந்தியா சிமென்ட்ஸ் (India Cements), பாக்ஸ் கான் (FoxCon) முத்தூட் பைனான்ஸ் (Muthoot Finance), சுதர்லேன்ட் (Sutherland), ஸ்டார் ஹெல்த் (Star Health Alliance ) போன்ற முன்னணி நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1425 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மை செயலாளர் மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ..இன்னசென்ட் திவ்யா, 'நான் முதல்வன்' திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் டாக்டர்.ஜெயப்பிரகாசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர்களாக சுப்ரியா சுலே, பிரபுல் படேல் நியமனம்!

### தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார் அறிவிப்பு!

மும்பை, ஜுன் 12 -

1999ம் ஆண்டு காங்கிரசில் இருந்து விலகிய சரத்பவார் மற்றும் பி.ஏ. சங்மா ஆகியோர், அதே ஆண்டில் தேசியவாத காங்கிரஸ் கட்சியை தொடங்கினர்.

**25வது கட்சியின் நிறுவன நாள்!**

சரத்பவார் மராட்டிய மாநிலத்தை சேர்ந்தவர் என்பதால், அந்த மாநிலத்தில் தேசியவாத காங்கிரஸ் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கி வருகிறது. இந்த நிலையில் தேசியவாத காங்கிரசின் 25வது ஆண்டு நிறுவன நாள் விழா நேற்று டெல்லியில் நடந்தது. இதில் சரத்பவார் கட்சியின் தேசிய செயல் தலைவராக தனது மகள் சுப்ரியா சுலே எம்.பி.யை அறிவித்தார். மேலும் அவரை கட்சியின் மத்திய தேர்தல் குழு தலைவராகவும் நியமித்தார். தேர்தல் குழு தலைவர் என்பதால், தேர்தல் நேரங்களில் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பெருமளவு அதிகாரம் சுப்ரியா சுலேவுக்கு கையில் இருக்கும்.

இதேபோல கட்சியின் மற்றொரு தேசிய செயல் தலைவராக முன்னாள் மத்திய மந்திரி பிரபுல் படேலையும் சரத்பவார் அறிவித்தார். இதில் புதிய செயல் தலைவரான சுப்ரியா சுலேக்கு மராட்டியம், அரியானா, பஞ்சாப் மாநில பொறுப்புகள் மற்றும் பெண்கள் அணி, இளைஞர் அணி, மாணவர் அணி பொறுப்புகளும் வழங்கப்பட்டு உள்ளன. பிரபுல் படேலுக்கு மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், ஜார்கண்ட், கோவா மாநிலங்களின் பொறுப்புகள் வழங்கப்பட்டு உள்ளன.

சமீபத்தில் கட்சி தலைவர் பதவியில் இருந்து விலகப்போவதாக சரத்பவார் அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார். கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் வற்புறுத்தலால் அவர் தனது முடிவை திரும்ப பெற்றார். அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் அடுத்த ஆண்டு இறுதியில் மராட்டிய சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. மேலும் தேசியவாத காங்கிரஸ், தேசிய கட்சி என்ற அந்தஸ்தையும் சமீபத்தில் இழந்தது. இதனை கவனத்தில் கொண்டு கட்சியை வலுப்படுத்தும் நோக்கில், மேற்கண்ட புதிய நியமனங்களை சரத்பவார் அறிவித்து உள்ளார். குறிப்பாக கட்சியில் அவரது மகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

அதேவேளையில் மராட்டிய சட்டசபை எதிர்க் கட்சி தலைவராக உள்ள சரத்பவாரின் அண்ணன் மகன் அஜித்பவாருக்கு கட்சியில் முக்கிய பொறுப்புகள் எதுவும் வழங்கவில்லை. அஜித்பவார் பா.ஜனதாவுடன் கூட்டணி சேர முயற்சித்து பரபரப்பை ஏற்படுத்தியவர் ஆவார். இருப்பினும் அஜித்பவார் முன்னிலையிலேயே புதிய நியமனங்களை சரத்பவார் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி3/2761/2023 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT - 2023-24**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக (GST 18% சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| **மண்டலம் - 14ல் உள்ள 1 எண்ணிக்கையிலான பேருந்து சிமெண்ட் கான்கீரிட் சாலைகளை மேம்படுத்தும் பணி** | **1 முதல் 4** | **குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.241.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.244.00 இலட்சங்கள்** | **பணியின் மதிப்பில் 1 சதவீதம்** | **முதல் வகுப்பு** |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **27.06.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **28.06.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 2966 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்


---

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! தொடர்ந்து உயர்த்தப்பட்டு வரும் " மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை என்றால், வீட்டில் 'பேன்' சுவிட்சைப் போடாதீர்கள்...வீட்டுக்கு வெளியே போய் மரத்தடியில் அமர்ந்து கொள்ளுங்கள்!" என்று, அஸ்ஸாம் சட்ட மன்றத் தலைவர் பிஸ்வாஜித் தைமாரி, அந்த மாநில பொதுமக்களைக் கேலி செய்திருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா, அவர் பா.ஜ..கவைச் சேர்ந்தவர் அல்லவா ! அவர் அப்படிச் சொல்லியிருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை !**

**ஆனால் அவர் தனது அதிகாரப் பூர்வமான வீட்டில், மொத்தம் 22 ஏ.சி.க்களைப் பொருத்தி, வெகு சுகமாக வாழ்கிறாராம். அதற்கான கட்டணத்தை அரசாங்கம் அல்லவா செலுத்துகிறது!**

**பிரான்ஸ் நாட்டின் கடைசி மகாராணி மேரி அன்ட்னாய்னெட், பசியால் வாடிய மக்கள் தம் பசி போக்கிக்கொள்ள ரொட்டித்துண்டு கேட்டபோது, போய் 'கேக்'சாப்பிடும் படி கேலி பேசினாராம்.**

**அந்த சர்வாதிகார ராணிக்கும், அஸ்ஸாம் பா.ஜ.க. சபாநாயகருக்கும், அதிகார மமதையில் எந்த வேறுபாடும் இல்லை.**

**ஆனால் ஒன்று; இது மாதிரி நபர்கள், பா.ஜ.க. பயணத்தின் திசையைப் பறைசாற்றுகிறார்கள் !**